நல்லூர் இளை நாலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாண

Registered as a News Paper　பக்கங்கள்: 04　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　Peoples Daily　மக்கள் தினசரி

நாதம் 03　திருவள்ளுவர் ஆண்டு 2023　ஆவணி 20　(05 - 09 - 1992)　சனிக்கிழமை　ஓசை 200

## இலங்கை திரும்ப மறுத்த அகதிகளுக்கு உதவிகள் நிறுத்தப்பட்டது

அகதிகளுக்கு வழங்கப்படும் உதவி இலங்கை திரும்ப மறுப்புத் தெரிவித்த 48 குடும்பங்களுக்கு மறுக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த இரண்டு மாதங்களாக இரு வாரத்துக்கு ஒரு முறை வழங்கப்படும் இலவசப் பணமும், பங்கீட்டு உணவும் இவர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களது குடும்ப அட்டைகள், மற்றும் ஆவணங்கள் முகாமுக்குப் பொறுப்பாகவுள்ள விசேட கலெக்டரால் பறிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சென்னையிலுள்ள இடைத் தங்கல் முகாமில் உள்ள அகதிகளில் 42 பேர் தமது விருப்பத்துக்கு மாறாகவே தாங்கள் கொண்டுவரப்பட்டதாக அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இந்த அகதிகள் தத்தம் முகாம்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் நிவாரணக் குறைப்பு நடவடிக்கை பட்டினிச் சாவிற்கு இட்டுச் செல்லும்

## அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்டனம்

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த அகதிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படடு வந்த நிவாரணப் பொருள்களின் பெறுமதியை அரைவாசியாகக் குறைத்தமை மக்களைப் பட்டினிச் சாவிற்குத் தள்ளும் ஒரு நடவடிக்கை என யாழ் மாவட்டத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

இம் மாதம் முதல் மாதத்தில் நான்கு வாரங்களுக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரணப் பொருள்கள் இரண்டு வாரங்களுக்கு மட்டும் வழங்கப்படவுள்ளதாக சிறிலங்கா அரசாங்கம் நேற்று முன் தினம் அறிவித்ததைத் தொடர்ந்தே அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது கண்டனத்தைத் தெரிவிததுள்ளன.

குடா நாட்டில்மட்டும் லட்சக்கணக்கான மக்கள் ராணுவ நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட்டுஇடம் பெயர்ந்துள்ளனர். இவர்கள் ஏற்கனவே பலவசதியீனங்களுடன் தமதுவாழ்க்கையைத் தொடர்கின்றனர். இந்த நிலையில் இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும்நடவடிக்கையானது மக்களைப் பட்டினிச் சாவிற்குத் தள்ளும் நடவடிக்கையாகும். இவ்வாறான நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கும் ஆரம்ப நடவடிக்கையாககண்டனமகஜர் ஒன்று ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதற்காக குடாநாட்டில் இயங்கும் அனைத்து அரசசார்பற்றநிறுவனங்களும்பங்குபற்றும் விசேட கூட்டம் ஒன்று நாளை நடைபெற உள்ளது இக் கூட்டத்தில் அரசின் மேற்படி நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளன. (க)

## நிவாரண வெட்டை எதிர்த்து ஒன்றுதிரண்டு போராட வருக

### மக்கள் நலன் காக்கும் கழகம் அழைப்பு

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சதியை முறியடிக்க அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்று திரண்டு எதிர்க்க முன் வர வேண்டும் என இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது

இது தொடர்பாக அக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் இன்று தமிழ் பிரதேசங்களில் இடம் பெறும் இரா... டினியில் வாடுகின்றனர். இந் நிலையில் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த இலவச உலர் உணவு நிவாரணத்தை அரசு திட்டமிட்டு அரைவாசியாக வழங்க திட்டமிட்டுள்ளதை எமது கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேலும் இந் நிவாரணக் குறைப்பை உடனடியாக மறுபரிசீலனை செய்யக் கோரி சிறிலங்கா ஜனாதிபதிக்கும் புனர்வாழ்வு அமைச்சுக்கும் மகஜர் ... தெரிவிக்க வேண்டும் என கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

## நிவாரண வெட்டை உடன் அமுல்படுத்துக

### அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த அகதிகளுக்கான உலர் ...

அரசாங்க அதிபர் அனைத்து உதவி அரசாங்க அதிபர்களுக்கும் பணித்துள்ளார்.

வவுனியாவிற்கு அப்பால் செல்ல

## வடபகுதி வாகனங்களுக்கு தடைவிதிக்க யோசனை

(வவுனியா)

வடபகுதி வாகனங்கள் வவுனியாவைத் தாண்டிச் செல்வதற்கு தடைவிதிப்பதற்கு இராணுவ உயர்பீடம் யோசனை செய்து வருவதாக அறியப்பட்டது.

வடபகுதி வாகனங்கள் வவுனியா நகரைத் தாண்டிச் சென்று அனுராதபுரம், கொழும்பு போன்ற இடங்களில் பொருள்களை கொள்வனவு செய்து வருகின்றமை தெரிந்ததே.

தென்பகுதியில் குண்டு வெடிப்பு, மற்றும் அசம்பாவித சம்பவங்கள் எவையும் நடைபெறுவதை தடைசெய்யும் நோக்குடனேயே இப் புதிய திட்டம் அறிவிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதி சிங்கள வாகனங்களில் கொண்டுவரப்படும் பொருள்களை வவுனியாவில் வைத்து வடபகுதி லொறிக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விசாரணை நடைபெறுகிறது

கல்விப் பொது தராதரப் பரீட்சையின் பௌதிகவியல் வினாத்தாள் வெளியானவை குறித்து விசாரணை நடாத்தப்படுமென பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவிதுள்ளார்.

இவ்விசாரணையை சி.ஐ.டி. பொலிசார் மேற்கொள்வரெனத் தெரியவருகிறது.

## அரச அதிபர் கொழும்பு செல்வார்

யாழ். அரச அதிபர், யாழ். கல்விப் பணிப்பாளர் ஆகிய இருவரும் இன்று காலை கொழும்புக்குப் புறப்பட்டுச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு இராணுவ தாக்குதல் நிறுத்தப்படவில்லை

### - கேணல் முனசிங்கா

வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் எவையும் இடை நிறுத்தப் படவில்லை என கேணல் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன வடக்கில் இராணுவ நடவடிக்கைகளுக்கான ஆயத்தங்கள் இடம் பெறுகின்றன எப்பொழுது தாக்குதல் தொடங்கும் என்பதை முன் கூட்டியே கூற முடியாது.

## கிழக்கு மாகாண குண்டுவெடிப்பு தொடர்பு இல்லையென புலிகள் மறுப்பு

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் நடந்த இரு வெடிகுண்டுத் தாக் ... லகம் மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தாக்குதல்களை அப்பாவி மக்களுக்கு ... ஏற்படும் பிளவுகளால் அரசு மட்டுமே பயனடையும் என்று புலிகள் அமைப்பு வெளியிட்ட

இது தொடர்பாக அக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் இன்று தமிழ் பிரதேசங்களில் இடம் பெறும் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்துள்ள மக்கள் பொருளாதாரத் தடையுடன் கூடிய பல்வேறு துன்பங்களையும் அனுபவித்து அரைப் பட்

குறைப்பை உடனடியாக மறுபரிசீலனை செய்யக் கோரி சிறிலங்கா ஜனாதி 1திக்கும் புனர் வாழ்வு அமைச்சுக்கும் மகஜர்கள் அனுப்புவதுடன் அரசின் இத் திட்டமிட்ட சதியை முறியடிக்க அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்று திரண்டு எதிர்ப்பையும் கண்டனத்தையும்

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்த அகதிகளுக்கான உலர் உணவு விநியோகத்தை அரைவாசியாக்கும் அரசின் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத் தும்படி யாழ். அரசாங்க அதிபர் அனைத்து உதவி அரசாங்க அதிபர்களுக்கும் பணித்துள்ளார்.

மேற்படி அரசின் தீர்மானம் தொடர்பான உத்தியோக பூர்வ அறிவித்தல் நேற்றுக் காலை கிடைததைத் தொடர்ந்து மேற்படி உத்சரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதேமாதிரியான உத்தரவைக் கொண்ட சுற்றுநிருபம் கூட்டுறவு அ 'விருத்தி உதவி ஆணையாளர் மற்றும் பல நோக்கு கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர்கள் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. (க)

# மண்டபம் முகாம் செல்ல ஐ. நா. அதிகாரிக்குத் தடை

(சென்னை)

மண்டபம் அகதிகள் இடைதங்சல் முகாமுக்குச் செல்ல அகதிகளுக்கான ஐ நா உயர் ஸ்தானிகர் அமைப்பு அதிகாரி டபிள்யூ எஸ் வின் அம்மையாருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

புதுடில்லியிலுள்ள இந்த அதிகாரி இரமேஸ்வரத்துக்குச் சென்று, இலங்கைத் தமிழ் அகதிகள் சுய விருப்பத்தின் பேரில் நாடுதிரும்புகிறார்களா என்பதைப் பார்வையிடவே அனுமதி கோரியிருந்தார்.

புதுடில்லியிலுள்ளஅகதிகளுக்கான ஐ. நா உயர் ஸ்தானிகர் காரியாலயம் இந்த விடயத்தில் கடுமையாக நடந்து கொள்ளும் என்று அஞ்சி அகதிகளை ஏற்றிகொண்டு மன்னார் செல்லவிருந்த கப்பற் பயணம் கைவிடப்பட்டது.

இந்தியக் கப்பல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இந்தக் கப்பல் அகதிகளை ஏற்றிச் செல்லும் பணியில் மன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையில் பத்துப் பயணங்களை மேற்கொள்ளவிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்தப் பயணங்கள் சென்ற மாதம் மேற்கொள்ளப்படவிருந்தன.

## விமானங்கள் தயார் அகதிகள் திரும்ப மறுப்பு

(சென்னை)

தமிழ் நாட்டு அரசின் அகதிகள் புனர்வாழ்வுத் திணைக்களம் இந்த மாதம் எட்டு விமானங்களில் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப இந்தியன் ஏயார் லைன்ஸ் விமான நிறுவனத்துடன் ஏற்பாடு செய்துள்ளது.

அடுத்த வாரத்திலிருந்து வாரத்துக்கு இரண்டு நாட்கள் திங்கள், செவ்வாய்க கிழமைகளில் இந்தியாஏயார் லைன்ஸ் விமானங்கள் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருக்கோணமலைக்கு ஏற்றிச் செல்லும்.

சென்னையிலிருந்து கிடைக்கும் தகவலின் படி, ஒரு விமானத்தில் நிரப்பக் கூடிய பயணிகள் கூட இலங்கை திரும்பிச் செலல முன்வரவில்லை.

அகதிகளைக் கபபல் மூலமும் திருக்கோணமலைக்கு ஏற்றி வர சென்னை அகதிகள் புனர் வாழ்வுத் திணைக்கள அதிகாரிகள திட்டமிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கபடுகிறது. கப்பலில் ஒரு பயணத்துக்குக் குறைந்த பட்சம் 750 பிரயாணிகளாவது வேண்டும். இந்தக் கப்பல் பயணம் வரும் 10ஆம் திகதிக்கு ஏற்பாடாகியுள்ளது. அகதிகளில் பலர் திருக்கோணமலைக்குப் பதிலாக மன்னார் செல்ல விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## அரசின் செய்திக்கு யாழ் அரச அதிபர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான நிவாரணப் பொருள்களைக் குறைக்குமாறு தான் அரசாங்கத்தைக் கோரவில்லை எனவும் அவ்வாறு கூறபபட்டது தவறானது எனவும் யாழ். அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் அவர் தெரிவிக்கையில் கடந்த காலங்களில் ஆறு மில்லியன் ரூபா பெறுமதியான கௌபி, பயறு, குரக்கன் போன்ற உப உணவும் பொருள்கள் அரசாங்கத்தால் அனுப்பப்பட்டிருந்தன இவ்வாறு அனுப்பப்பட்டவற்றில் பெருமளவானவை பழுதடைந்த நிலையிலேயே இருந்தன.

அத்துடன் பெருமளவு உப உணவுத் தானியங்கள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன அவற்றை சந்தைப் படுத்தி ஊக்குவிக்க வேண்டியிருந்ததால் அவற்றை இங்கு அனுப்ப வேண்டாம் என தான் அரசாங்கத்தைக் கோரியிருந்ததாக தெரிவித்தார்.

ஆனால் நிவாரணத்தைக் குறைக்குமாறு தான் கோரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## உணவு நெருக்கடியை தவிர்க்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

அரச நிவாரணம் அரைவாசியாகக் குறை கப்பட்டதையடுத்து யாழ் குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏற்படப்போகும் உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதறகு யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் முயற்சி எடுத்துவருகின்றது. மேற்படி இணையத்தின் அதிகாரிகள் நேற்று யாழ். அரச அதிபரைச் சந்தித்து அரச நிவாரணம் குறைக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் குறித்து கலந்துரையாடினர் அத்துடன் மேற்படி நிலைமைகள்குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்கொழும்புதலைமை அலுவலகத்துக்கு அவசர வானொலிச் செய்தி ஒன்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக நேறறு நண்பகல் அனுப்பிவைக்கப்பட்டது அரசின் நடவடிக்கையால் அகதிகளுக்கு ஏற்படப்போகும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் நடந்த இரு வெடிகுண்டுத் தாக்குதல்களில் முப்பதுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்ட சம்பவங்களில் தாங்கள் சம்பந்தப்படவில்லை என்று புலிப் படையினர் மறுத்துள்ளனர்.

இந்த வெடிகுண்டுத் தாக்குதல்களுக்குப் புலிகளே காரணம் என்று இராணுவ அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளது செரிந்ததே

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு லண்டனிலுள்ள அதன் அனைத்துலகச் செயலகம் மூலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்தாக்குதல்களை அப்பாவி மக்களுக்கு எதிரான கோழைத்தனமான வன்முறைச் சம்பவங்கள் என விபரித்துள்ளது.

இப்படிப்பட்ட தாக்குதல்களால் தமிழ் மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்குமிடையில் ஏற்படும் பிளவுகளால் அரசு மட்டுமே பயனடையும் என்று புலிகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்லாயிரக் கணக்கான மக்கள் காணாமற் போனதற்குப் பொறுப்பாயிருந்த இந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகள் காரணமென்பது சந்தேகத்திற்குரியதே

(லண்டன்)

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த சம்பவங்கள் சநதேகத்துக்குரிய சூழ் நிலைகளில் நந்திருப்பது உண்மை என்று கிழக்கு மாகாணத்தில் நடந்த இரு வெடிகுண்டுச் சம்பவங்கள் பற்றி பி.பி.ஸி கருத்துத் தெரிவித்துள்ளது

வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றவுடனேயே இந்தச் சம்பவங்களுக்குப் புலிகளே பொறுப்பு என்று மிகத் துரிதமாக சுட்டிக் காட்டப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## துப்பாக்கிச் சூட்டிற்கு இருவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

அளவெட்டிப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்றவர்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் இத்தாக்குதலில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் மேற்படி பகுதிக்கு சென்று தமது வீட்டிலிருந்து பொருள்களை எடுத்துவரவும் வீட்டைப்பார்வையிடவும் சென்றவர்கள் மீது அப்பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் கண்டபடி துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்

இத்தாக்குதலில் நா. செல்வவேல் (வயது 19), சின்னத்தம்பி (வயது 32) ஆகிய இரு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மீனவர் மீது பீரங்கித் தாக்கு ஒருவர் தலைசிதறி பலி

குடாக்கடல்ப்பகுதியில் மீனவர்கள் மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார்.

நேற்று மேற்படி கடற்பகுதியில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடற்படையினர் மீனவர்களை நோக்கி சரமாரியானபீரங்கித் தாக்குதல்களை நடாத்தினர். இத் தாக்குதலின்போதுநாவாந்துறையைச் சேர்ந்த சு.குயின்சன (வயது 13) என்ற இளைஞர் தலை சிதறி கொல்லப்பட்டுள்ளார் ஏனைய மீனவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளனர். (க, பா, 21)

# புலிகளுடன்பேசுவதன்மூலமே பிரச்சினையை தீர்க்க முடியும்

## தமிழ் எம். பி. தெரிவிப்பு

"தமிழர்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யக்கூடிய முழுமையான தீர்வு ஒன்றை முன் வைப்பதன் மூலமும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கின்ற விடுதலைப்புலிகளுடன் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகள் நடத்துவதன்மூலமுமேஇப் பிரச்சினைகு முழுமையான நிரந்தரமான தீர்வு காண முடியும்."

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் மட்டக்களப்பில் இடம் பெற்ற கருத்தரங்கொன்றில் பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில்;

இந்த உண்மையான யதார்த்தமான நிலையை அரசாங்கம்உணரவேண்டும். இனப் பிரச்சினைக்கு அரசு விரைவில் தீர்வொன்றைக் காணவேண்டும் இப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வொன்றைக் காணாது

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### அனுமதி மாதிரிப் பரீட்சை
(ஆண்டு 5)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை (ஆண்டு 5 மாணவர்களுக்கு) 06-09-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 மணி தமிழ், கணிதம், ஆங்கிலம் பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3128)

### இப்பில் இப்பில் விதை
இப்பில் இப்பில் விதைகள் தேவைப்படுவோர் ரூபா. 1/- பெறுமதியான அஞ்சல் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/4989)

### கடிகாரமா? றேடியோவா?
உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (சி/4964)

### விற்பனைக்கு
HONDA 1.5 Kv ஜெனறேற்றர், மண்ணெண்ணெய் FRIDGE, அலுமினிய ஷோகேஸ் வேறும் பல பொருள்கள், ஜெயா ஏலவிற்பனைப் பகுதி டாஸ் கொம்பளெக்ஸ், 163, பிரதான வீதி யாழ்ப்பாணம். (3118)

### பெற்றுக் கொள்ளவும்
சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த உயர்தர மாணவன் மணிதரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட திறப்புக் கோர்வை ஒன்று கண்டிவீதி 'சூரியபவான் கபே' உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது அதன் உரிமையாளர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். [10]

### இன்று
[குருநகர்]

யாழ். வண்ணையம்பதி நாவலடி கற்பக விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் இன்று 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். விசேட அபிஷேகம், பூசைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

## கேள்வி அறிவித்தல்

யாழ். கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையிலுள்ள தேவையில்லாத கழிவு நீர் சேகரிக்கும் குழி வடிகட்டும் தளம் ஆகியவற்றில் இருந்து சாக்கடை நீரைத்

**துப்பரவு செய்தல்**

மேற்படி வேலைக்கான கேள்விகள் என்னால் கோரப்படுகின்றன.

1. இவ்வேலை சம்பந்தமான முழுவிபரங்களும் இச் செயலகத்தின் பரிபாலனக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.
2. அரசாங்கத்தில் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கலாம்.
3. கேள்விப்படிவங்கள் மீளளிக்கப்படும் கட்டுப்பணமாக ரூபா 25/-செலுத்தி யாழ். அரசாங்க அதிபரிடமிருந்து 1992. 09 09 ஆம் திகதி தொடக்கம் 1992. 09. 23 ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் காலை 10. 00 மணி தொடக்கம் பிற்பகல் 3 00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
4. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் யாழ் அரசாங்க அதிபர், மாவட்ட ஆணையர் செயலகம், யாழ்ப்பாணம்என விலாசமிடப்பட்டு1992. 09 25ஆம் திகதி முற்பகல் 11. 00 மணிக்கு முன்பாக கிடைக்கத் தக்கதாக பதிவுத் தபால் மூலமாக அல்லது இதற்கென இச்செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடவேண்டும் கேள்விப்பத்திரம்சமர்ப்பீக்கப்படும் வேலையின் பெயர், பத்திரம் அடங்கிய தபால் உறையின் இடது பக்கத்தில் தெளிவாக குறிக்கப்பட வேண்டும்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
02 09. 1992

கா. மாணிக்கவாசகர்
அரச அதிபரும் மாவட்ட
ஆணையரும்
யாழ். மாவட்டம்.

(சி4999)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### 2ஆம் லெப். டார்லி
[ஜோசப் - மரயகொறற்றி]

(மணலாறில் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவு)

வீரஜனனம் : 27 - 12 - 1968

வீரச்சாவு : 05 - 09 - 1991

ஈழவிடுதலையை என்றும் நேசித்ததால் பாசத்தைத் துறந்து பாசறை சென்றவள். களம் பல கண்ட பெண் புலி நீயன்றோ எம் ஊரின் களம் புகுந்த முதற் பெண் புலியும் நீயன்றோ. டார்லி கொட்டும் குண்டு மழையில் கூட நீ விடுதலைக்காய் நனைந்தவள். அதனால் வரலாறு படைத்திட்ட மணலாறு மண்ணில் உன் கடைசி உதிரத்தை உரமாக்கினாய்.

உன் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

சற்கோட்டை.
அல்வாய் மேற்கு.

(சி-5 ) ;

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 05

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் மல்லைத்தீவு - மாங்குளம், மல்லாவிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்

1985 ஆம் ஆண்டு வவுனியாவுக்கும், மதவாச்சிக்குமிடையில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்ட 35 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு அம்பாறை கல்முனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**அஜந்தன்** [சின்னத்தம்பி குணசிங்கம் - காரைதீவு, அம்பாறை]

1987 ஆம் ஆண்டு வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**இரத்தினம்** [வவுனியா]

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் முகாமில் வைத்து இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பெண், இளைஞன் ஆகிய 2 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு திருக்கோணமலை - பன்குளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். பாஸ்கர்** [வேலன் பாக்கியம் விஜயகுமார் - காரைதீவு, அம்பாறை]

முல்லைத்தீவு - மாங்குளம், வன்னிவிளாங்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த -

**சண்** [சின்னத்தம்பி புண்ணியமூர்த்தி - வன்னிவிளாங்குளம், மாங்குளம், முல்லைத்தீவு]

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். சாமன்** [கதிர்காமத்தம்பி ஜெதீஸ்வரன் - ஏ. ஜி ஏ. வீதி, செங்கலடி, மட்டக்களப்பு]

இதே சுற்றிவளைப்பின்போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். முத்து** [அழகப்போடி குமார் - மயிலம்பாவெளி, மட்டக்களப்பு]

கிளிநொச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எம்மைப் பிரிந்த -

**பழனி** [கிண்ணையடி, வாழைச்சேனை மட்டக்களப்பு]

முல்லைத்தீவு - மாங்குளம், வவுனிக்குளம் பகுதியில் சுகவீனம் காரணமாக எம்மைப் பிரிந்த -

**சத்தியசீலன்** [துரைரத்தினம் சுரேஷ்குமார் - ஒட்டறுத்தகுளம், வவுனிக்குளம், மாங்குளம், முல்லைத்தீவு]

யாழ் கோட்டைப் பகுதியில் வீரச்சாவெய்திய -

**கேம்நாத்** [ஏகநாதன் விமல்ராஜ் - காரைநகர், யாழ்ப்பாணம்]

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சா வெய்திய-

**றிசான்** (செல்லையா சத்தியசீலன் - நாவலர் வீதி, மாதகல் - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மயிலிட்டிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

**கமல்** [இராசரத்தினம் ஜீவராஜன் - கீரிமலை வீதி, சிததன்கேணி - யாழ்ப்பணம்]

மட்டக்களப்பில், கடமைக்குச் சென்று காணாமல் போன தமிழ்ப் பொதுமகன் - சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 2 இளைஞர்கள் உட்பட செங்கலடி, ஏறாவூர், உதயநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 4 - தமிழர்கள் - கல்லாற்றுப்பகுதியில் சிறிலங்கா- இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 10 தமிழர்கள்

1991-ம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பாபு** [கந்தசாமி ஆனந்தம் - கோரக்கல்லிமடு, கிரான் மட்டக்களப்பு]


யாழ். பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா-1992
மேற்படி விழாவில் பங்கு பற்றும்
அனைத்து பட்டதாரி மாணவ / மாணவிகளுக்கு
எமது நல்வாழ்த்துக்களும் நல்லாசிகளும்

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ உங்களை வரவேற்கின்றது**

யாழ். வளாக, கொழும்பு / பேராதனை வளாக பட்டதாரி மேல் அங்கிகள் எம்மிடம் உண்டு.

முக்கிய குறிப்பு:- ஸ்ரூடியோ இல. 1 இலும் பிரத்தியேகமாக திருத்தி அமைக்கப்பட்ட ஸ்ரூடியோ 2 இலும் படம் எடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**
301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4996)



பாசையூர் முத்தமிழ் கழகத்தின் அனுசரணையுடன்
பாசையூரில் முதுபெருங்கலைஞர்கள்
இளைய தலைமுறையுடன் இணைந்து
தமிழர்தம் பாரம்பரிய நாட்டுக்கூத்து கலைவடிவில்
பாசையூர்ப்புலவர் மதுரகவி அமரர் மிக்கோர்சிங்கத்தின் கவியுருவில்
பாசையூர் பிரகாஷ் நாடகமன்றம் தயாரித்து அரங்கேற்றும்

**"வீர பாண்டிய கட்டப்பொம்மன்"**

இடம்: பாசையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றல்
காலம்: 06 - 09 - 92 ஞாயிறு நேரம்: இரவு 7.15 மணி

முற்றிலும் இலவசம், முத்தமிழ் பழரசம்
முழுமையாய்ப் பருக முன்னமே வருக! (3133)


சுடுகாட்டு எரி அரங்கில்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

★ கணிதம் ★ தமிழ் ★ சமூகக்கல்வி

ஆகிய பாடங்களுக்கு ஆண்டு 6 - 11 வகுப்புகளில் கற்பிப்பதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கணக்கு எழுதுவினைஞர் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விண்ணப்பங்கள் அனைத்தும் அதிபருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்

03 - 09 - 1992 செயலர் (சி/5001)

---

வரலாற்றின்

## ஓராண்டு நினைவலைகள்



வீர உயிர்ப்பு 09 — 01 — 1976

வீரச் சாவு 17 — 09 — 1991

**வீரவேங்கை மில்டன்**

(தெட்சணாமூர்த்தி சங்கரதாஸ் (சங்கர்)

திதி: ‹5· 09· 1992

என்றும் இவன் நினைவை இதயத்தில் சுமக்கும்

சங்கரதாஸ் வீதி,
உரும்பராய்.

-குடும்பத்தினர்-

(சி/4962)

---

சுடுகாட்டு எரி அரங்கில்

# சிந்து கண்ணீர் அஞ்சலிகள்



### 90-ம் நாள்

நினைவஞ்சலி

த.வி.பு.மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த

**வீரவேங்கை சுரதா**

(பிரதாபசிங் சுகந்தா-நெல்லியடி)

மன்னார் சிறநாவற்குளம் இராணுவ முகாம் பகுதியில் தவறுதலாகஉட்புகுந்த வேளையில் ஏற்பட்ட நேரடிமோதலில் வீரச்சாவு எய்தியவர்.

தாயின் மடியில் 12-05-1972

தாயக விடிவில் 07-06-1992



### 2-ம் ஆண்டு

நினைவஞ்சலி

நெ. ம.ம வி மாணவன்

**பிரதாப்சிங் குமணன்**

1990 இல் அந்திமாலையில் பொம்பர் வீசிய குண்டில் மடிந்தவன்.

மண்ணில் 26-11-1977

விண்ணில் 24-07-1990

இளங்குருத்து குமணனையே இழந்ததுயர் கடலைவிட்டு
எழுந்திருக்க முன்னமொரு எதிர்பார்க்கா இழப்பிதுவே
தாயகவிடிவுதான் என்விடிவு என்று போனாயே
தாயக விடிவுக்கு முன் உன்முடிவு வந்ததென்ன?
மேஜர் பாரதி, கப்டன் சுவேனி, 2-ம் லெப் பல்லவி
உன்னுடன் கூடிவந்து வீரச்சாவெய்தினராமே
சிந்தும் குருதியால் தமிழீழம் சிவந்த பின்தான்
சொந்தமண் ஆட்சியுரிமை நிலைநாட்டப்படுமோ என
சிந்தினாயேசு சுந்தா.

உனக்கும் தம்பி குமணனுக்கும், உன்னுடன் வீரச்சாவை ஏற்றவர்களுக்கும்,

**எமது கண்ணீர் அஞ்சலிகள்.**

(06-09-1992 அன்று ஞாயிற்றுக்கிழமை வீட்டில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் போராளிகள், உறவினர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்)

நெல்லியடி,
கரவெட்டி.

பெற்றோர், உடன் பிறப்புக்கள்,
நண்பர்கள்.

(சி/4995)

---

10 தமிழர்கள்

1991-ப் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பாபு** [கந்தசாமி ஆனந்தம் - கோரக்கல்லிமடு, கிரான் மட்டக்களப்பு]

**சூரி** (தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம் - கோயில் போரதீவு, பெரியபோரதீவு - மட்டக்களப்பு)

**மலையான்** [முத்துலிங்கம் செல்வகுமார் - பெரிய போரதீவு - மட்டக்களப்பு]

**கலிஸ்ரன்** [பரமக்குட்டி ஜெபக்குமார் - ஈச்சந்தீவு - மட்டக்களபபு]

**யோசப்** (சுப்பிரமணியம் உதயகுமார் - கரையாக்கன்தீவு, கன்னன்குடா - மட்டக்களப்பு)

**பிரசாத்** (வடிவேல் ரவி - 3-ம் குறிச்சி செல்வாநகர், ஆரையம்பதி - மட்டக்களப்பு)

**சுபாதிகா** (பேசுமரி வேலுச்சாமி - 1-ம் வட்டாரம், குச்சவெளி - திருகோணமலை)

**மேஜர் ஜானி** (குலசேகரம்பிள்ளை கலைவாணன் - 4-ம்வட்டாரம், சீனன்குடா - திருகோணமலை)

**பாபு** (தங்கவடிவேல் சசிகுமார்-பெருவெளி தோப்பூர், மூதூர் - திருக்கோணமலை)

**லெப்-அப்பி** (முத்தையா கணேஷ் செம்மண்தீவு, முருங்கன்-மன்னார்)

**லெப்-சீமா** (இராசலட்சுமி சுந்தரலிங்கம் பொன்னகர், முள்ளியவளை - முல்லைத்தீவு)

**சந்திரன்** (ஆறுமுகம் சண்முகராஜா - 231, புன்னைநீராவி, விசுவமடு-முல்லைத்தீவு)

**மனோகரி** (செல்வநிதி சேதுபதி - இராமநாதபுரம் கிளிநொச்சி)

**2-ம் லெப். அருள்நங்கை** (பிரேமலதா மார்க்கண்டேசர்- ஊறணி, வல்வெட்டித்துறை-யாழ்ப்பாணம்)

**டார்லியா** (மரியகொறற்றி யோசப் -சக்கோட்டை, அல்வாய்தெற்கு, யாழ்ப்பாணம்)

**உமா** [பாலரஜனி பரமசிங்கம் - செம்பியன்பற்று வடக்கு- யாழ்ப்பாணம்]

**பாரூக்** [தனபாலன் சிறிதரன் - சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி, யாழ்ப்பாணம்]

**இராவணன்** [கதிரவேலு கிருபாகரன் - நெல்லியடி, கரவெட்டி, யாழ்ப்பாணம்]

**குரு** [சண்முகலிங்கம் முகுந்தன் - முல்லைப்புலவு, காரைநகர்-யாழ்ப்பாணம்]

**ரஞ்சித்குமார்** (பாலகுமார்-3-ம் வட்டாரம், புங்குடுதீவு, யாழ்ப்பாணம்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5004)

நல்லூர் [illegible] யாழ்ப்பாணம்



### சிந்தனைக்கு

நியாயமாக மனிதர் செய்யக் கூடியது அனைத்தையும், அவர்கள் செய்வார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவீனம்

— ரிச்சர்ட் வேட்லி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## இறுதி அஸ்திரம்

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை வழங்கி வந்த நிவாரணப் பொருள்களின் விநியோகத்தை 50 வீதத்தால் குறைக்கப் போவதாக புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி டீ சில்வா தெரிவித்துள்ளார். இதன் பிரகாரம் ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு வாராந்தம் வழங்கி வந்த 315 ரூபா பெறுமதியான நிவாரணம் சரிபாதியாக ரூபா 157.50 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதேவேளை இவ் நிவாரண வெட்டிற்கு அரசாங்கம் ஒதுக்கிய நிதி போதாமையே காரணம் எனவும் திரு. டீ. சில்வா தெரிவித்துள்ளார். அரசாங்கத்திடம் கோரப்பட்ட 260 கோடி ரூபாவிற்கு பதில் 100 கோடி ரூபா மட்டுமே ஒதுக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிங்கள அரசாங்கத்தின் இம் மனிதநேயமற்ற நடவடிக்கையால் சுமார் ஆறு லட்சம் தமிழ் மக்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள் எனத் தெரிய வருகின்றது இதில்சுமார் 3 லட்சத்து25 ஆயிரம் பேர் யாழ். குடாநாட்டினுள் உள்ளவர்களாகும்.

பாதிப்புக்கு உள்ளாகும்இந்த இலட்சக்கணக்கான மக்கள், சிறிலங்கா இராணுவம் தமிழர் பிரதேசங்களில் மேற்கொண்ட தாக்குதலின் காரணமாக அகதிகளாகியவர்கள். அதாவது இராணுவத்தால் விரட்டப்பட்டவர்கள் ஆகும். இதன் காரணமாக தமது வீடு, சொத்து என்பனவற்றோடு தமது தொழில் நடவடிக்கைகளையும் அதன் காரணமாக வருமானத்தையும் இழந்தவர்கள் ஆகும் மேலும் பலர் குடும்பத்தலைவனையும், குடும்பத்திற்கு வருவாயைத்தேடிக் கொடுத்தவர்களையும் இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் தமிழர் பிரதேசத்தின் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையும் எரிபொருள் தடையும் தொழில் தார நடவடிக்கைகளை முழுமையாக முடங்கச் செய்துள்ளன. அத்தோடு கடற்படையினரின் அடாவடித்தனத்தாலும், கரையோரப் பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதினாலும் மீன்பிடித் தொழிலும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதாவது அரசாங்கத்தினதும், இராணுவத்தினதும் திட்டமிட்ட நடவடிக்கையில் தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையிலும், தமிழ் மக்களைத் ‘தமது பிரஜைகள்’ எனக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் நிவாரணக் கொடுப்பனவில் [illegible]

# குடாநாட்டின் மீதான தாக்குதல் திட்டத்தை சிங்கள அரசு இன்னும் கைவிடவில்லை

யாழ். குடாநாட்டின் மீது சிறிலங்கா பெரிய தாக்குதலை தொடர்ந்து நடத்தவே எண்ணியுள்ளது.

யாழ். குடாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளை செயலிழக்கச் செய்வதன் மூலம் சிக்கலை தீர்த்துவிடலாம் எனக் கூறுகின்றது.

சிங்கள அரசுக்கும் தெளிவாக தெரிந்த விடயம் நிலப் பரப்பைப் பிடிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை செயலிழக்கச் செய்ய முடியாது.

அதேபோல் பெரும் நிலப் பரப்பில் நிலைகொள்ளும் முயற்சியில் தங்களைப் பெரும் இழப்புகள் தொடர்ந்து வரும் என்பதும், தொடர்ந்து நிலை கொள்ள முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

இத்தாக்குதல்களுக்கு பின்னர் பல காரணங்கள் இருந்தன. நாலு காரணங்களை முக்கியமாக குறிப்பிடலாம்.

1. அரசியல் ரீதியாக சிக்கலை தீர்க்க விருப்பமின்மை தமிழர்களுக்கு உரிமைகள் தரப்படக் கூடாது என்பதே அதற்குக் காரணம்.

2. போரைத் தொடர்வதன் மூலம் தமிழ் மக்களை பல வீனப்படுத்தலாம். அவர்தம் போராட்ட உணர்வை மழுங்கடிக்கலாம் என்பது இன்னுமொரு காரணம்.

3. சிறிலங்காவில் எழும் அரசியல், பொருளாதார நெருக்கடிகளை திசைதிருப்ப போராட்டத்தை காரணமாய்க் காட்டிக் கொண்டே இருக்கலாம் என்பது இன்னுமொரு காரணம்

4. தமிழ் மக்களின் பொருளாதார பலத்தை அழிப்பது மறைமுகமாக தாயகத்தை பறிப்பது இனப்படு கொலையை தொடர்வது என்பது இன்னுமொரு முக்கிய காரணமாகும்.

தமிழீழத்தின் தென்பகுதியான திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறையில் 26 திங்களாக(மாதங்களாக)நடக்கும் போரினால் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஏதிலிகளாக(அகதிகளாக) வாழ்கின்றனர்.

அண்மைக்கால புள்ளி விபரங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 17, 614 வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டதையும், 24, 815 வீடுகள் பகுதியாவது அழிக்கப்பட்டுள்ளதையும் எடுத்துக்காட்டுகின்றது.

கொல்லப்பட்ட மக்கள் தொகையை சரியாக கணக்கிட முடியுமா என்பது சந்தேகமே.

தமிழீழத்தின் தென்பகுதியில் பெருமளவில் இனப்படு கொலை அழிவு, பாலியல்வன் முறைகள் தொடர்ந்தன. தொடர்கின்றன. சிங்கள குடியேற்ற முயற்சிகளும் தொடர்கின்றன.

தமிழீழத்தின் இதயம் என சொல்லப்படுகின்ற மணலாற்றில்இருந்து தமிழீழத்தின் தென்பகுதியில் பெருமழிவை தொடரும் சிறிலங்கா அரசு இப்போது தன் கவனத்தை தமிழீழத்தின் தலை என சொல்லப்படும் யாழ். குடாநாட்டின் மீதுதிருப்பியுள்ளது.

வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, தீவுப்பகுதிகள், பலாலியை அண்டிய பகுதிகளில் இருந்து இலட்சக்கணக்கில் மக்கள் ஏதிலிகளாக ஏற்கனவே இடம் பெயர்ந்து விட்டனர். அண்மையில் நடந்ததாக்குதல் நடவடிக்கை பூமி நடுக்கப் 1 ஆல் 20,000 குடும்பங்கள் கிட்டத்தட்ட ஒருஇலட்சம்மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் ஆகிய இடங்களில் முறையே 14, 17, 10, 04 எதிரிகள் தங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கும், கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, பொருளாதார அழிவை தொடர சிறிலங்கா அரசு எண்ணுகிறது.

போராட்டத்தில் ஆயுதபலமும், ஆட்பலமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை.

ஆட்பலம் இருந்தால் எதிரியிடமிருந்து ஆயுதம் எடுக்கலாம். ஆயுதத்தோடு ஆட்பலம் கூடினால் எதிரி எம் நிலப் பரப்புக்குள் வருவதை தடுக்கலாம்.

எதிரியிடமிருந்து பெருமளவில் ஆயுதங்கள் தொடர்ந்து பறிக்கப்படுகின்றன. எம்மிடம் எதிரியிடம் இருந்து பறித்த பவல் வாகனமும், தற்போது பறிக்கப்பட்ட நீருந்து விசைப் படகும் உள்ளது.

கைப்பற்றியபின் பல கனரக வாகனங்கள் கொண்டு வர முடியாமல் அழிக்கப்பட்டன.

இப்படியான வெற்றிகளை நாம் கேள்விப்படுகிறோம். எல்லோரும் பெருமைப்படுகின்றோம்.

ஆனால் இவ் வெற்றிகளுக்கு பின்னால் உழைக்கும் போராளிகளின் உழைப்பு, தற்கொடை எமக்குத் தெரிவதில்லை. ஏன்பலரின் முகத்தை யாருக்குமே தெரியாது. பூநகரியில் கண்ணிவெடி, டென்சில் சாவு, நீருந்து விசைப்படகு கையகப்படுத்தப்பட்டது. என கேள்விப்படும் போதெல்லாம் இவற்றை சாதிக்க உழைத்தவர்களை நாம் நினைவு கூர வேண்டும்.

இந்த முயற்சியில் நீண்ட நாட்கள் உணவின்றி, நீரின்றி, தூக்கமின்றி ஈடுபடும் போராளிகளில் பலர் வீரச்சாவை சந்திக்கின்றார்கள். அல்லது பெருமளவில் காயப்படுகின்றார்கள்.

சிலவேளைகளில் ஒரு சாதனைக்காக திங்கள் கணக்கில் இவர்கள் நேரத்தைச் செலவிடுகின்றார்கள். பல தோழர்களை இழக்கின்றார்கள். இவை எமக்குத் தெரிவதில்லை.

அண்மையில் வெளிவந்த சுதந்திரப் பறவைகளில் வெளிவந்த கப்டன் தேனுயாவின் போராட்ட வரலாறு இதற்கு நல்ல ஒரு எடுத்துக் காட்டாகும்.

அண்மையில் நாம் லெப்டினன்ட் கேணல் ராஜனை இழந்தோம் இந்த இழப்பு எவ்வளவு பெரியது என்பதை பலரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

டென்சில் கொப்பகடுவ இறந்த போது சிறிலங்கா கண்ணீர்விட்டு அழுதது தமிழ் கூலிப் பட்டாளங்களும் அவர்களோடு சேர்ந்து அழுதது.

வான்படை, கடற்படை, தரைப்படை, கனரக வாகனங்கள், ஆயுதங்கள், பணபலம், பின்னால் ஒரு அரசு இவ்வளவையும் வைத்துக் கொண்டு டென்சில் சாதித்தது என்ன என்று பார்த்தால் பெரிதாக ஒன்றுமில்லை, மக்களையும், சொத்துக்களையும், பெருமளவில் அழித்தவர் என வேண்டுமானால் பெருமைப்படலாம்.

டென்சில் போன்றவர் இன்னுமொரு அரச படையை சந்தித்து போரிட்டதில்லை.

இந்தியப்படை வந்தபோது அடங்கி ஒடுடிங்கிப் போய் இருந்தார்கள். தமிழீழப் போராட்டத்தின் வளர்ச்சியோடு ராஜனுக்குப் பெரிய பங்குண்டு. வான்படை, கடற்படை, பணபலம், பின்னால் ஒரு அரசுஇல்லாமல்சிறிலங்கா அரசுக்கு எதிராக மட்டுமல்ல, இந்திய அரசுக்கு எதிராகவும் போரிட்டு மிகப் பெரிய சாதனைகளை செய்ததில் ராஜனுக்கு பெரிய பங்குண்டு.

நான்கு தடவைக்கு மேல் களத்திலே காயப்பட்ட அவ் வீரனின் சாவு மிகப் பெரிய இழப்பே.

> ‘புலிகளின் குரல்’ வானொலியில் மக்கள் அரங்கம் நிகழ்ச்சியில் நேற்று திரு. யோகரெட்ணம் யோகி அவர்கள் வழங்கிய கருத்தினை முழுமையாக தருகிறோம்.

மிகப் பெரிய தற்கொடைகள் மூலமே எம் போராட்டம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### 10 கோடி பெறுமதியான

# பல்கலைக்கழக உபகரணங்களுக்கு கூட்டுப்படை தடைவிதிப்பு

(நமது நிருபர்)

பல்கலைக்கழகம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்த பத்துக்கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை யாழ்ப்பாணம் எடுத்து வர கூட்டுப்படைத் தலைமையகம் தொடர்ந்து அனுமதிதர மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது [illegible]

[illegible] வனவு செய்ய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. இந் நிதியிலிருந்தே மேற்படி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இவை கடந்த இரண்டு வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்டு சுங்கப் [illegible]

[illegible] முடிந்ததாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன

இறுதியாக இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவருடன் தொடர்பு கொண்டு கூட்டுப்படைத் [illegible]

## பயிலுனர் ஆசிரியர்களாக 119பட்டதாரிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கு மாகாணங்களில் 119 பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வட-கிழக்கு மாகாண அமைச்சு தீர்மானித்துள்ளது. ஆசிரியர்கள் பற்றாக்குறையான பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

வட- கிழக்கு மாகாணங்களில் தற்சமயம் 266 பயிலுனர் பட்டதாரி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன என்று அதே வட்டாரங்கள் கூறுகின்றன.

## சாய்ந்தமருது சம்பவம்; விசாரணைக் குழு நியமனம்

சாய்ந்தமருதில் [illegible]

... இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் தமிழர் பிரதேசத்தின் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையும் எரிபொருள் தடையும் தொழில் தார நடவடிக்கைகளை முழுமையாக முடங்கச் செய்துள்ளன. அத்தோடு கடற்படையினரின் அடாவடித்தனத்தாலும், கரையோரப் பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதினாலும் மீன்பிடித் தொழிலும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதாவது அரசாங்கத்தினதும், இராணுவத்தினதும் திட்டமிட்ட நடவடிக்கையில் தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதாரம் முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையிலும், தமிழ் மக்களைத் 'தமது பிரஜைகள்' எனக் கூறிக் கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் நிவாரணக் கொடுப்பனவில் பெரும் வெட்டை ஏற்படுத்தியுள்ளது.

இப் பெரும் வெட்டிற்கு நிதிபற்றாக்குறை காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றமை ஏற்றுக் கொள்ளக் கூடியதொன்றல்ல. ஏனெனில், புனர்வாழ்வு அமைச்சு நிவாரணக் கொடுப்பனவிற்கெனக் கோரிய 260 கோடி ரூபா இன்று சிறிலங்கா வீண் விரயம் செய்யும் பெரும் தொகைநிதியின் ஒருசிறுப்குதியாகும் அதாவது இவ் வருடம் சிறிலங்கா ஆயுதப்படைக்கென 1530 கோடி ரூபாவை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியது. பின்னர் ஒதுக்கீடு போதாது என இராணுவம்கோரியபோது. மேலும்500கோடிரூபாவைகுறை நிரப்பு பிரேரணைமூலம் அரசாங்கம் வழங்கமுன் வந்தது இதற்கென பாதுகாப்பு வரியையும் மூன்று மடங்காக அதிகரித்தது.

இதேவேளை கடந்த யூன் மாதம் இடம்பெற்ற கம்முதாவக் கொண்டாட்டங்களுக்கென 200 கோடி ரூபாவை சிறிலங்கா அரசாங்கம் செலவீடு செய்தது. அதாவது நிதி நெருக்கடி எவ்வளவு கடுமையானதாக இருப்பினும் அரசாங்கம் தனது திட்டங்கள் எதிலும் மாற்றங்களைச் செய்யவில்லை. வெட்டுக்களை ஏற்படுத்தவில்லை. கேளிக்கைகளை நிறுத்தவில்லை. இந்நிலையில் நிதி பற்றாக்குறை என்பது ஏற்புடையதல்ல இராணுவச் செலவீட்டுடனும், கம்முதாவக் கொண்டாட்டத்துடன் ஒப்பிடுகையில் நிவாரணத்தில் வெட்டு செய்யப்பட்ட தொகை குறைவானதேயாகும்.

இந்நிலையில் அரசாங்கம் நிதி பற்றாக்குறை என்ற ரீதியில் மேற்கொள்ளும் நடவடிக்கை திட்டமிட்டு தமிழ்மக்களை பட்டினிச் சாவின் விளிம்பிற்குத் தள்ளும் முயற்சியாகும் அதாவது நிவாரணத்தில் வெட்டு என்பது இன்று தமிழ் மக்களையே நேரடியாகப் பாதிப்பது ஒன்றாகும் !ஏனெனில் தமிழர்களே இன்று பெரும்பாலும் அகதிகளாகவுள்ளனர். சிங்களவர்கள் அகதிகளாக இருப்பின் அரசாங்கத்தால் வெட்டு என்பது எண்ணிக்கூடப் பார்க்க முடியாததாகும்.

இராணுவரீதியாக வெற்றிகொள்ளமுடியாத தமிழரின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை வேறு வழியில் வெற்றிகொள்ள சிறிலங்கா அரசு முனைகிறது. உணவை ஒரு ஆயுதமாகப் பாவித்து தமிழரைப் பட்டினிபோட்டு போராட்டத்தைஒடுக்க சிங்கள அரசு எண்ணுகின்றது. அதாவது தனது இறுதி ஆயுதத்தை அரசு பாவிக்கத் தொடங்கி விட்டது. இதை தமது அயராத கடின உழைப்பின் மூலம் வெற்றிகொள்ளவேண்டிய இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்கள் உள்ளனர்.

# பல்கலைக்கழக உபகரணங்களுக்கு கூட்டுப்படை தடைவிதிப்பு

(நமது நிருபர்)

பல்கலைக்கழகம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்த பத்துக்கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை யாழ்ப்பாணம் எடுத்து வர கூட்டுப்படைத் தலைமையகம் தொடர்ந்து அனுமதிதர மறுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு தேவையான கணணிகள் மருத்துவ மற்றும் ஆய்வுகூட உபகரணங்கள், காகிதாதிகள் ஆகியவற்றை கொள்வனவு செய்ய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. இந் நிதியிலிருந்தே மேற்படி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டது. இவை கடந்த இரண்டு வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்டு சுங்கப் பண்டகசாலையில் தேங்கிக் கிடக்கின்றன

இவற்றை இங்கு எடுத்துவர பல்கலைக்கழக நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்ததாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன

இறுதியாக இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவருடன் தொடர்பு கொண்டு கூட்டுப்படைத் தலைமையக அனுமதியைப் பெற்றுத்தருமாறு கோரிய போதும் அவர் அவற்றை ஏனைய பல்கலைக்கழகங்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு பதிலளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

(க) (ச)

# மேஜர் முரளி நினைவு விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி)

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப்போட்டிகள் நேற்று ஆரம்பமாகியது இவ் விளையாட்டுப்போட்டி 14ஆம் திகதி முடிவடைகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது

கோட்ட மட்டத்தில் நேற்று 4 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் தெற்கு சின்னத்தம்பி வித்தியாலயத்தில் தாச்சி விளையாட்டுப் போட்டியும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உதைபந்தாட்டப் போட்டியும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் பெண்களுக்கான வலை பந்தாட்டப் போட்டியும் நடைபெற்றது.

இன்று சனிக்கிழமை ஏழு மைல் மரதன் ஓட்டப் போட்டி வதிரிச் சந்தியில் ஆரம்பமாகி வதிரிச் சந்தியில் முடிவடையும். ஆண்கள், பெண்களுக்கான 15 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி நெல்லியடிச் சந்தியில் ஆரம்பமாகி நெல்லியடிச் சந்தியில் முடிவடையும்.

இறுதிப் போட்டி வடமராட்சி கோட்ட மட்டத்தில் 14 ஆம் திகதி நெல்லியடி மகாவித்தியாலத்தில் நடைபெறும். இப்போட்டிகளில் பாடசாலை மாணவ மாணவிகள் கலந்து கொள்வர். (82)

# கொம்பனித்தெரு 'குடுராஜா' மர்மமாக கொலை

(கொழும்பு)

'குடுராஜா' என்றழைக்கப்படும் போதைப் பொருள் வியாபாரியான சிதம்பரம் தர்மராஜா மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் கொழும்பு கொம்பனித்தெருவில் பெரிய பணக்காரர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவரது ஆடம்பரமான வீட்டு முன் மண்டபத்தில் இரத்த வெள்ளத்தில் தர்மராஜா இறந்து கிடக்கக் காணப்பட்டார்

நடுச்சாமத்துக்குப் பிறகு அவர் காரில் வீடு வந்துசேர்ந்தாரென்றும் அதன்பின் கார்ச் சாரதி தனது வீட்டுக்குச் சென்றுவிட்டார் என்று காலஞ்சென்றவரின் மனைவி மரணவிசாரணையின் போது தெரிவித்தார்.

கொம்பனித்தெரு பொலிசாரின் விசாரணை தொடர்கிறது.

## குண்டு வெடிப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை பஸ் நிலையத்தில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற பஸ் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கை பத்தாக உயர்ந்துள்ளது.

இக்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் இருந்த மேலும் ஒருவர் இறந்ததைத் தொடர்ந்து இவ் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

# பயிலுனர் ஆசிரியர்களாக 119பட்டதாரிகள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கு மாகாணங்களில் 119 பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க வட-கிழக்கு மாகாண அமைச்சு தீர்மானித்துள்ளது. ஆசிரியர்கள் பற்றாக்குறையான பாடசாலைகளுக்கு இவர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள்.

வட- கிழக்கு மாகாணங்களில் தற்சமயம் 266 பயிலுனர் பட்டதாரி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன என்று அதே வட்டாரங்கள் கூறுகின்றன.

# சாய்ந்தமருது சம்பவம்; விசாரணைக் குழு நியமனம்

சாய்ந்தமருதில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய விசாரணைக்குழுவொன்றை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 45மணிக்கு சாய்ந்தமருதுசந்தையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 26 பேர் கொல்லப்பட்டதுதெரிந்ததே.

இந்தச் சம்பவம் குறித்து விசாரித்து அறிக்கையொன்றை சமர்ப்பிக்க ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி பி. வி.பி. விஜயசேகர நியமிக்கப் பட்டுள்ளார்.

# போராட்டத்தில் பங்கெடுக்காவிட்டால் அது வரலாற்றுத் துரோகமாகி விடும்

## -புதுவை இரத்தினதுரை

[யாழ்ப்பாணம்]

''எமக்கு முன்னர் வாழ்ந்த தலைமுறையினர் போராடியிருந்தால் இன்று நாம் இந்த அளவிற்குதுன்பப்படத்தேவையில்லை இதே துன்பத்தை அடுத்தசந்ததி படக்கூடாது என்றால் இந்த தலைமுறையிலேயே நாம்இந்தப் போராட்டத்தில் வெற்றிகண்டுவிட வேண்டும் இந்த மண் இனி தொடர்ந்து போராடும்''

இவ்வாறு கடந்த திங்கட் கிழமை யாழ். புகையிரதநிலையத்தில் ஆகஸ்ட் மாதத்தில் வீரச்சாவடைந்த தீவகப்பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் உரையாற்றும் போது தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்இந்தப்போராட்டம் சோற்றுக்காகவோ சோப்புக்காகவோ மாவுக்காகவோ மண்ணெண்ணெய்காகவோ இடை நிறுத்தப்படமாட்டாது இது எமது தன்னிகரில்லாத்தலைவன் தளபதிகள் பல்லாயிரக்கணக்கான போராளிகள்எடுத்த முடிவாகும்.

கரும்புலியாக பாயப் போகிறவன் சிம்மாசனத்தில் ஏறப் போகிறவன் போல் சிரித்துக் கொண்டே செல்கிறான் சென்று வா என்றால் வென்று வரும் வீரர்கள். இத்தகைய பெருமை மிக்க எமது போராட்டம் மேலும் வீச்சுக் கொள்ளுமே தவிர வீழ்ந்து போகாது எதிரி எம்மண்ணில் வரமுடியும் ஆனால் ஒரு நிமிடம் கூட நிம்மதியாக நிலைத்து நிற்க முடியாது.

இந்நிலையில் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவரும் பங்காளிகளாக மாறவேண்டும் இல்லையேல் அது ஒரு வரலாற்றுத் துரோகமாகும்.

1984ஆம் ஆண்டு வரை இந்த மண்ணில் நடந்து வந்த திட்டமிட்ட இனஅழிப்பு வேலைகளை தடுத்து நிறுத்தி எம்மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என ஆசைப்பட்டவர்கள் தான் இந்த மாவீரர்கள். இந்த மாவீரர்கள் விழுந்த போதும் நிறைய கனவுகளோடு தான் விழுந்தார்கள்.

எம்மண்ணில் கால் பதிப்பதென்றால் எமதுசடலங்களை கடந்து தான் போக வேண்டும் என்று கூறி நின்று போராடும் வீரம் தமிழீழத்தில் தான் காணப்படுகிறது அந்தப் பெருமையைத் தேடித்தந்த மாவீரர்களுக்கு நாம் செய்யும் கைமாறு அவர்களது இலட்சியக் கனவுகளை நிறைவேற்றி வைப்பதே எனத் தனதுரையில் குறிப்பிட்டார்.

தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சேரலாதன் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், வி.பு. மகளிர்முன்னணியின் தீவகப் பொறுப்பாளர் செல்வி அன்பரசி கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் மறவன் ஆகியோரும் இக் கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (22)

## மரம் நடுகைத் திட்டம்

(கொழும்புத்துறை)

கடந்த வருடம் போன்று இவ்வருடமும் யாழ் - மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நிழல் மரங்களை நாட்டுவதற்கு மாநகராட்சி மன்றம் திட்டமிட்டுள்ளது.

இதன் பொருட்டு மகோக்கனி, இலுப்பை, கொன்றை, வாகை, சவுக்கு, வேம்பு போன்ற மரங்கள் பெருமளவில் தேவைப்படுகின்றன.

எனவே, இவற்றை மரங்களாகவோ, அல்லது விதைகளாகவோ இலவசமாகக் கொடுத்துதவ விரும்புவோர் மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (24)

ஈழநாதம்

# ஆசிரியர்களின் பங்களிப்பு போராட்டத்திற்கு அவசியம்

## - நிருபா

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆசிரியர்களின் கணிசமான பங்கு அவசியமாகும். போராட்டத்தின் முதுகெலுப்பாக ஆசியர்களே செயற்படவேண்டும். இவ்வாறு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலா சாலையில் அண்மையில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி நிருபா தெரிவித்தார். தமிழீழ மாணவர்கள் விடுதலை உணர்வைப் பெறுவது ஆசிரியர்களின் சேவையிலேயே தங்கியுள்ளது என்றும் அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்

மேற்படி வைபவத்தில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

## தியாக தீபம் ஏற்றலுடன் 3 ஆம் நாள் விழா ஆரம்பம்

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தியாகி திலீபன் நினைவு தடகள விளையாட்டு விழா இன்று காலை 8.30 மணிக்கு தியாக தீபம் ஏற்றலுடன் ஆரம்பமாகும்.

நல்லூரில் தியாகி திலீபன் உண்ணாவிரதமிருந்த இடத்திலிருந்து எடுத்துவரப்படும் தியாக தீபம் மைதானத்தில் ஏற்றிவைக்கப்படுதலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

தீபம்எடுத்துவரப்படும் அதே வேளை மைதனத்தில் உடற்பயிற்சிக் கண்காட்சியில் ''திலீபன்'' என்ற எழுத்துக் கோலம் செய்து காண்பிக்கப் படும்.

அச்துடன் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் ''பாண்ட்''வாத்திய இசைநிகழ்ச்சியும் இடம் பெறும்.

## புலிகள்

படுவது குறித்து உள்ளூர்த் தலைவர்கள் கருத்தும் கவலையும் செரிவித்துள்ளனர் என்று பி.பி ஸி மேலும் தெரிவித்துள்ளது.

## உணவு

உணவுப் பற்றாக்குறையை முடிந்தவரை தவிர்த்துக் கொள்ளும் முகமாக மேலதிக உணவுப்பொருள்களை குடாநாட்டுக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் மேற்படி வானொலிச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (க)

## தொடர்பு

அரசு தனது சொந்த நோக்கங்களை அடைவதற்காக இப்படிப்பட்ட தாக்குதல்களை நடத்தத் தயங்கமாட்டாது என்றும் புலிகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இலங்கை திருமப

மேலும், மண்டபம் முகாமில் உள்ள அகதிகள் ஒதுக்குப்புற முகாம்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## வடபகுதி

---

## 31-ம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்

தோற்றம் 0?. 01. 1936



மறைவு 07. 08. 1992

### அமரர் சிதம்பரம்பிள்ளை தருமலிங்கம்

அறிவு நலம் சிறந்திருக்க அன்புள்ளம் நிறைந்திருக்க கண்ணியம் நிறைந்த உங்கள் முகம் காணாது ஏங்கித் தவிக்கிறோம். அப்பா, இனி எவ் இன்பம் எமக்கு நேர்ந்தாலும் வழிகாட்டி இன்றி, நாம் வாழத் தவிக்கிறோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய எம் உயிர் உள்ள வரை இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கேடில்ஸ் நகர்,
கெற்வேலி,
மிருசுவில்.

பிரிவால் துயருறும்
-குடும்பத்தினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 — 05



வீரச்சாவு 16 — 09

---

# பதின்னான்கு கூடுகளில் இராணுவ உளவாளிகள்

[வவுனியா]

வவுனியா நகரப்பகுதியில் உளவு பார்க்கும் தமிழர்களின் வசதி கருதி சிறிலங்கா இராணுவத்தால் பதின்னான்கு கூடுகள் அமைக்கப்பட்டுள்ளன

வவுனியா பழைய பிறவுண் அன் கொம்பனி கட்டடப் பகுதியிலேயே இது அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூடுகளில் நிறுத்தி வைத்துத்தான் பயணிகள் அனைவரும் விசாரணை செய்யப்படுகின்றனர். இராணுவத்திற்கு உளவு பார்த்துச் சொல்லும் சிலரை மற்றையவர்கள் காணாமல் இருப்பதற்கு இக் கூடுகள் உதவுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரில் நடமாடித் திரியும் சிறிலங்கா இராணுவ உளவாளிகள் வடபகுதி நிலவரங்களை அறிவதில் மிகவும் ஆர்வம் காட்டி வருவதாக அறியப்பட்டது. (தி)

# விடைத்தாள் திருத்துதல் 14 ஆம் திகதியுடன் முடிவுறும்

[கொழும்பு]

அண்மையில் முடிவடைந்த க. பொ. த. உயர்தர பரீட்சை விடைத்தாள்களுக்கு மதிப்பெண் வழங்கும் வேலைகள் இம் மாதம் 14 ஆம் திகதியுடன் முடிவுறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

சுமார் 1,58 000 மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றினார்கள் என்றும் விடைத்தாள்களுக்கு மதிப்பெண்களை வழங்கும்பணியில் சுமார் 2600 ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்றும், ஏழு பாடசாலைகளில் இத் திருத்த வேலைகள் நடைபெறுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச அதிபர்

இன்று புறப்பட்டுச் செல்லும் என எதிர்பார்க்கப்படும் ''குமாரி'' கப்பலிலேயே இருவரும் புறப்பட்டுச் செல்லுகின்றனர் இவர்கள் தங்களுடன் நடந்து முடிந்த க. பொ. த. (உ தர.) பரீட்சையின் விடைத்தாள்களையும் எடுத் செல்கின்றனர். (பா)

## புலிகளுடன்

அரசு இழுத்தடித்துச் செல்லுமானால் உலக அரங்கில் ஏற்பட்டுவருகின்ற அரசியல் மாற்றங்கள் காரணமாக நாளடைவில் நாடு பிளவு படுவதைத் தவிர்கக முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

## துப்பாக்கி


வரும் பலத்தகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் அளவெட்டி வடக்கு ஞானவைரவர் ஆலய அருகாமையில் நடைபெற்றதாக தெரியவருகிறது. (க),(பா),(09)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

உடுப்பிட்டி மண் 19 — 02 — 1974



மணலாறு மண் ?5 — 09 — 1991

### 2-ம் லெப்டினன்ட் இராவணன் (சுரேஸ்)

(கதிரவேலு தங்கவேலு கிருபாகரன்)

மகனே!
மனமினிக்க வாயினிக்க சுரேஸ் என்றழைத்தோமே

---

# சுகாதாரமற்ற முறையில் வைக்கப்பட்ட பாண் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதிச் சந்தியில் தேநீர்க் கடையொன்றில் சுகாதாரமில்லாத முறையில் அடுக்கிவைக்கப் பட்டிருந்த மொத்தம் 9940 கிராம் நிறையுள்ள இருபத்தொன்பதரைத் துண்டு பாண்களை யாழ் மாநகரசபை சுகாதாரப்பரிசோதகர் மற்றும் மருந்து - உணவு கடடுப்பாட்டுப் பரிசோதகர் ரி. மகாதேவனும் கைப்பற்றி அந்த இடத்திலேயே அவற்றை அழிததார்கள்.

கடந்த புதனன்று மாலை 4-30 மணியளவில் திடீர் பரிசோதனை ஒன்றை மேற்கொண்ட இந்த அதிகாரிகள் ஈக்களும், பூழுக்களும் படியக்கூடிய நிலையில் பாண் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு, அவை பாவனைக்குரியதல்ல என்று கடை உரிமையாளரை எச்சரித்தது டன் பாண்களையும் அழித்தனர்.

## வாணிபம் / தொழில் முயற்சிகளைப் பதிவு செய்தல் விண்ணப்பப்படிவங்களைப் பெறும் நாட்கள்

| வாணிபம் தொழிலின் தன்மை | உதவி அரசாங்க அதிபர் பிரிவு யாழ்ப் பாணம் | பருத்தித் துறை | சாவகச் சேரி |
|---|---|---|---|
| அ. பவுண் / பொன் / வெள்ளி நகை வாணிபம் | 05-09-92 | 15-09-92 | 23-09-92 |
| நகை உற்பத்தித் தொழில், அடகு கடை | 09-09-92 வரை | 18-09-92 வரை | 27-09-92 வரை |
| ஆ. பலசரக்கு வாணிபம் | ,, | ,, | ,, |
| இ புடவை வாணிபம் | ,, | ,, | ,, |
| ஈ. கட்டிடப் பொருள்கள், மின் கருவிகள் மோட்டார் உதிரியபாகங்கள் | ,, | ,, | ,, |
| உ. தேநீர்ச்சாலைகள் - உணவகங்கள் | 10-09-92 | 19-09-92- | 28-09-92 |
| விடுதிகள் / மதுபான சாலைகள் | 14-09-92 வரை | 22-09-92 வரை. | 02-10-92 வரை |
| ஊ தொழில் நிறுவனங்கள் | ,, | ,, | ,, |
| எ. உயர் தொழில் / வாழ்க்கைதமொழில் | ,, | ,, | ,, |
| ஏ. ஏனையவை | ,, | ,, | ,, |

ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான பதிவுக்கால அட்டவணை பின்பு அறிவிக்கப்படும்.

வலிகாமம் பிரிவைச் சேர்ந்தவர்கள் யாழ் மாவட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்திலும், வடமராட்சிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் வடமராட்சி வருவாய் பகுதிச் செயலகத்திலும், தென்மராட்சிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தென்மராட்சி வருவாய்ப் பகுதி செயலகத்திலும் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

---

## தியாக தீபம் ஏற்றலுடன் மூன்றாம் நாள் தடகள விழா ஆரம்பம்

| வட்டப் பிரதேசம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சண்டிலிப்பாய் | 07 | 03 | 04 |
| யாழ்ப்பாணம் | 03 | 01 | 02 |
| தெல்லிப்பளை | 02 | 04 | 01 |
| உடுவில் | 01 | 01 | — |
| நல்லூர் | — | 02 | 01 |
| பருத்தித்துறை | — | 02 | — |

பளை, கோப்பாய், கரவெட்டி, தீவகம் ஆகிய வட்டப் பிரிவுகள் தலா 1 வெண்கலப் பதக்கத்தைப் பெற்றன.

நேற்று நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஒரு புதிய சாதனை நிலைநாட்டப்பட்டது. ஆண்களுக்கான நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் யாழ்ப்பாண வட்டப் பிரதேசத்தை சேர்ந்த ம. அன்ரனி 5. 94 மீற்றர் தூரத்தை பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.

05 — 1973 — 09 — 1991



## வீரவேங்கை லோஜி

(தருமலிங்கம் கௌரிமலர்)

திதி:4. 09· 92

புலியாக மாறிவிட்ட கௌரி - நீ
அன்னையின் கரங்களிலே - அரும்பாக தவழ்ந்தாய்
அண்ணனின் கரங்களிலே - அன்பாக வளர்ந்தாய்
ஆசையின் கரங்களிலே மலராக மலர்ந்தாய்
எம் உள்ளத்திலே றோஜாவாக மலர்ந்தாய்
தமிழ் தாயிடம் அடைக்கலம் புகுந்தாய் - இப்போது
அணையா விளக்காய் சுடர் விடுகிறாய்.

அன்றைய தினம் வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது கண்ணீர்அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

கேடில்ஸ் நகர் -குடும்பத்தினர்.
செற்வேலி, மிருசுவில். (3135)

பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

வடபகுதி ளில் ஏற்றி கொண்டு செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கும்என நம்பப்படுகிறது.

இதே சமயம், ஈரப்பெரிய குளம் பகுதியில் செயல்படும் வாகன சோதனை நிலையம் வவுனியா விவசாயப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளதாகவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (தி)

குடாநாட்டின் வளர்க்கப்பட்டது. இதை அழித்துவிடலாம், அடக்கிவிடலாம் என நினைத்தவர்கள் அழிந்தது தான் நாம் கண்ட வரலாறு.

பெரும் இழப்புக்களோடு, தற்கொடைகளோடு எண்ணிப்பார்க்க முடியாத வெற்றிகளோடு தொடரும் எம்போராட்டம் தவிர்க்கமுடியாதது

நாம் சிறிலங்கா படைகளை எதிர்கொள்ள எம்மால் ஆன பங்களிப்பைச் செய்வோம்.

(கதிரவேலு தங்கவேலு கிருபாகரன்)

மகனே!
மனமினிக்க வாயினிக்க சுரேஸ் என்றழைத்தோமே
மறைந்து மாவீரனாகி ஆண்டொன்று ஆனதே
களங்களிலே இறைவனாய் நின்றாயே
மனங்களிலே மறக்கப்பட முடியாதவன் நீ
மணலாறு மண்ணைப் பார்க்கிறோம்
மனமாறும் வழியில்லை
உன் தாயக மீட்பு ஆசை நிறைவேறட்டும்

5-09-92 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன் கந்தையா வீதி, ஐயா, அம்பலம் தங்கவேலு
கரவெட்டி. (3136) குடும்பத்தினர்

## மானிப்பாய் கொத்தணி மாணவர்களுக்கு

''மானிப்பாய் இந்துக்கல்லூரியும் அதன் கீழ் உள்ள கொத்தணிப் பாடசாலைகளும் வழமை போல் இயங்குகின்றன. சகல மாணவர்களும் திங்கட்கிழமை (7-9-92) தத்தம் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.''

மானிப்பாய்
இந்துக் கல்லூரி

கொத்தணி அதிபர்

(3137)

## மரண அறிவித்தல்

## கபிரியேல் யாக்கோப்பு

பலாலி தெற்கு வசாவிளானைச் சேர்ந்த கபிரியேல் யாக்கோப்பு (சின்னத்தம்பி) அவர்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற அரியமுத்துவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சாந்தம்மா, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, கிறீஸதுராசா (லண்டன்), யோகராணி (கனடா), அருட்சகோதரி தவராணி, செலின், இருதயராணி (மருத்துவ ஊழியர்) வதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவராசா, தவம் காலஞ்சென்ற யோன், ஸ்ரொலா (லண்டன்) பேரின்பநாயகம் (கனடா) சில்வெஸ்ரர் செல்வநாயகம் (எஸ் எல். ஆர். சி) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் நீர்வேலி வடக்கு நீர்வேலியில் உள்ள எமது இல்லத்திலிருந்து இன்று (05. 09. 92) சனிக்கிழமை மாலை 3 00 மணியளவில் நீர்வேலி பரலோகமாதா ஆலயத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனிதமரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நீர்வேலி வடக்கு, தகவல்:
நீர்வேலி. தவம்

(3141)

ம. அன்ரனி 5. 94 மீற்றர் தூரத்தை பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.


## AL 93, 94 புதிய பிரிவுகள்

### ஆரம்பம்: 5-9-92 (சனி)

| நேரம் | பாடம் | ஆசிரியர் | அலகு |
|---|---|---|---|
| சனி/ஞாயிறு | | | |
| 7.45 - 9.00 | பௌதிகவியல் | திரு. வர்ணம் | ஒளியியல் |
| 10.45 - 11.45 | பௌதிகவியல் | திரு. பத்மநாதன் | பொறியியல் |
| 1.15 - 2.15 | விலங்கியல் | திரு நாகநாதன் | வன்கூட்டுத்தொகுதி |
| 2.15 - 3.15 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | தாவரப்பாகுபாட்டியல் |
| 3.15 - 4.15 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | நுண்ணுயிரியல் |
| 4.15 - 5.00 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | வினா-விடை வகுப்பு |
| 5.00 - 5.45 | இரசாயனவியல் | திரு. செல்வா | பொது இரசாயனம் |
| 5.45 - 6.30 | விலங்கியல் | திரு. நாகநாதன் | உணவுக்கால்வாய்த் தொகுதி |

## யூனிவேர்சல்

(சி-4988) கந்தர்மடம் - யாழ்ப்பாணம்


## அறிவித்தல்

### வவுனியா வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரிக்கான மாணவர் அனுமதி - 1991/ 92

மேற்படி பல்கலைக்சழகக் கல்லூரிக்கு 1991/92 ஆம் கல்வியாண்டிற்கு கணக்கியலும் நிதியும் டிப்ளோமா, ஆங்கில டிப்ளோமா ஆகிய பாடநெறிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பல்கலைக்சழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன மேற்படி பயிற்சிநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் 1992 செப்டெம்பர் 16,17, 18 ஆம் திகதிகளில் வவுனியா பல்கலைக் கழகக் கல்லூரியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் வந்து பதிவுகளைச் செய்துகொள்ளலாம். விரிவுரைகள் 21.09.1992 திங்களன்று ஆரம்பமாகும்.

02. 09. 1992 பணிப்பாளர்

(சி/5006)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 04-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 5498

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

28-6996, 41-6933, 28-1677, 24-5939, 28-4435, 24-7070, 6-535, 26-1349, 24-922

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

24-0521, 41-8292, 42 1494, 26-6062, 24-1040, 26-1428 26-525, 24-2288 26-766, 40-2394, 41-9997, 26-6628, 26-6029, 26-5206, 29-9771,


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.